செய்தி வெளியீடு எண்.8/2018 நாள் 26.01.2018

**சென்னைக் குடிநீர் வாரியத்தில் குடியரசு தின விழாவில்**
**மேலாண்மை இயக்குநர் திரு.சத்யபிரத சாகு, இ,ஆ.ப., அவர்கள்**
**தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகத்தில் குடியரசு தின விழா இன்று (26.01.2018) சிறப்பாக நடைபெற்றது.

குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. **சத்யபிரத சாகு**, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

இவ்விழாவில் வாரியத்தில் 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற முறையில் தூய்மையாக பணியாற்றிய அலுவலர்களை பாராட்டி 7 பணியாளர்களுக்கு நற்சான்றிதழ்களை மேலாண்மை இயக்குநர் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் சென்னைக் குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர். த. பிரபுசங்கர், இ.ஆ.ப., நிதி இயக்குநர் திரு. கே.முத்துக்குமாரசாமி, பொறியியல் இயக்குநர் திரு. ஜி.சங்கரலிங்கம், தலைமைப் பொறியாளர்கள் திரு.ஜி.சத்தியமூர்த்தி, திரு.ஏ.அப்துல்ரஷீத், திரு,வே.பொன்னம்பலவாணன், பொது மேலாளர் திரு.க.தர்ப்பகராஜ், மேற்பார்வைப் பொறியாளர்கள், பகுதிப் பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.









மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர் வாரியம்